SHRI SHANKARLAL SUNDARBAI
# SHASUN
JAIN COLLEGE FOR WOMEN

A Unit of Sri S. S. Jain Educational Society | Reaccredited by NAAC
Affiliated to University of Madras | An ISO 9001:2015 Certified Institution

சுழற்சி - 1 அரையாண்டு இதழ் 2022-2023

**தமிழ்த்துறை**
**செய்தி மடல்**

*திருவள்ளுவராண்டு*
*2053*
*ஐப்பசி/ மார்கழி*
*நவம்பர் 2022*
*செய்தி மடல் 1*

**பொறுப்பாசிரியர்கள்**
*நா. உமாமகேஸ்வரி*
*இரா.நாகராணி*

உரைப்பது அறிவு
உணர்வது ஞானம்

**உள்ளடக்கம்:**

| | |
|---|---|
| துறைத்தலைவர் மடல் | 1 |
| தமிழ்த்துறை நிகழ்வுகள் | 1-2 |
| தமிழ்த்துறையினரும் தமிழ்மாலையும் | 3-6 |
| மாணவிகளின் தேன்துளிகள் | 7-11 |
| ஷசுன் மாணவிகளின் திறன் | 12 |

# எழில்

உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு •

## பொறுப்பாசிரியர்

அன்பு அறம் அருளைப் புகட்டி
இன்ப வாழ்வினை மாந்தர்க்கு
அளித்து ....
இயலாய் இசையாய் இனிய கூத்தாய்
அயலகமும் வியக்க அறிவியலாய்…
ஆயிரம் யுகங்கள் கடந்தாலும்
அழியாது வாழும் மொழி!
இத்தகைய சிறப்புப் பொருந்திய தமிழ் மொழியின் பெருமையை மெருகேற்ற ஷசுன் தமிழ்த்துறை சொல்லால் எழில் மாலை சூட்டுகிறது.

## துறைத்தலைவர் மடல்

தமிழ் மூத்த மொழி. முதல் மொழி. எல்லா வளங்களும் நலங்களும் நிறைந்த மொழி. ஷசுன் கல்லூரியின் தமிழ் மொழித்துறை, தகவல் தொடர்பியலில் தனித்துவம் பெற்றிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. தமிழ்த்துறையின் முதல் செய்தி மடல் இது. மாணவியரும் பேராசிரியர்களும் இணைந்து கட்டிய இந்த எழில் மடலை ரசிக்கலாம் வாருங்கள்.

## தமிழ்த்துறை நிகழ்வுகள்

**பன்னாட்டு ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிலரங்கம்**

2022 – 2023 ஆம் கல்வியாண்டின் தொடக்கமாக இணைய வழியில், **“இந்திய மெய்யியல் மரபுகள்” என்னும் தலைப்பில்** பன்னாட்டு ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிலரங்கம் 03.08.2022 – 09.08.2022 வரை ஏழுநாள்கள் நடைபெற்றன. சிறந்த பேராசிரியர்கள் இப்பயிலரங்களில் ஆழமான , நுணுக்கமான கருத்துக்களை விளக்கியுரைத்தனர்.



## தமிழ்த்துறை நிகழ்வுகள்



கவிஞர் உமா பாரதி



லயன் Dr. சேகர்



திரு.சி.டி.வள்ளியப்பன்




### மகாகவி நினைவு நாள்

பாரதியார் நினைவு நாளான 11.09.2022 அன்று மகாகவி பாரதியாரின் வழித்தோன்றல் கவிஞர் உமா பாரதி அவர்கள் “மனதில் உறுதி வேண்டும்“ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். உரையின் இடையிடையே பாரதியார் பாடல்களிலிருந்து வினாக்கள் கேட்கப்பட்டன. பதிலளித்த மாணவிகளுக்குச் சிறப்பு விருந்தினர் பாரதியாரின் படைப்புகளைப் பரிசாக வழங்கினார்.

### உலக மொழி பெயர்ப்பு நாள்




கல்லூரியின் அகத்தர மதிப்பீட்டு மையமும் இளங்கன்னல் இன்பத் தமிழ் மன்றமும் இணைந்து 29.09.2022 அன்று உலக மொழி பெயர்ப்பு நாளை முன்னிட்டு கல்லூரி மாணவிகளுக்கு மொழிபெயர்ப்பு தொடர்பான போட்டிகள் நடத்தியது. இதில் சிறப்பு விருந்தினராக ஸ்டெனோகிராஃபர்ஸ் கில்ட் அசோசியேஷன் நிறுவனர் லயன் Dr.சேகர் கலந்து கொண்டார்.

### காந்தி ஜெயந்தி விழா









காந்தி ஜெயந்தியை முன்னிட்டு 02.10.2022 அன்று அகத்தர மதிப்பீட்டு மையமும் தமிழ்த்துறையின் இளங்கன்னல் இன்பத்தமிழ் மன்றம் மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் சென்னை பிரஸ்டீஜும் இணைந்து அனைத்துப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்க்கான ஓவியப்போட்டி யை நடத்தியது. இப்போட்டியில் 452 பள்ளி மாணவர்களும் 48 கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர். கமலா தியேட்டர் உரிமையாளர் திரு.சி.டி.வள்ளியப்பன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

## தமிழ்த்துறையினரும் தமிழ்மாலையும்



நா.உமா மகேஸ்வவரி

### இணைய வழியிலான பன்னாட்டு ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்வு

⇒ பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி -12.09.2022 – 17.09.2022

⇒ தமிழ்ப் பதிப்பு வரலாறும் தமிழ் ஆளுமைகளும் எனும் தலைப்பில் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் நடத்திய ஏழு நாள் பயிற்சி - 20.07.2022 – 26.07.2022

⇒ அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் – அரண் தமிழ் அறக்கட்டளை இணைந்து நடத்திய பன்முக நோக்கில் புதுச்சேரி – ஆவணமாக்கம் 2022 – 07.08.2022 – 15.09.2022 – 40 நாள்கள்

⇒ பல்கலைக்கழக மானியக் குழுவின் மனிதவள மேம்பாட்டு மையத்தின் (UGC-HRDC) ஆசிரியர் தூண்டல் பயிற்சி திட்டத்தில் (FIP) பயிற்சி - சென்னைப் பல்கலைக் கழகம் - 22.06.2022 - 21.07.2022.

### UGC Care list Journals - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

⇒ சிங்கத்தின் வால் சிறுகதையில் பதினொன்றாம் பரிமாணத்து மீமனிதன் என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை ஜூன் 2022 இல் வெளியானது.




### சிறப்பு விருந்தினர் / விருது

⇒ ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி – 19.10.2022 - வாசவி இலக்கிய மன்ற போட்டிகளின் நடுவர்.

⇒ ஸ்ரீ ராம் இலக்கிய கழகம் நடத்திய பேச்சு மற்றும் ஓவியப் போட்டிகளின் நடுவர் - 15.10.2022

⇒ தேசிய மரபு அறக்கட்டளையின் (National Heritage Trust) உலக அருங்காட்சியகத் திட்டக்குழு 26.11.2022 அன்று முன்னெடுத்த தொன்மை பேசுவோம் - பன்னாட்டு இணையவழிக் கருத்தரங்கில் "யாழ்" ஒரு பார்வை எனும் தலைப்பில் சிறப்புரை.

⇒ யாவரும் கேளீர் திறன் வளர் சங்கம் வழங்கிய தமிழ்ப்பற்றாளர் விருது - .31.04.2022 .



தமிழ்நாட்டின் மாநில மலர் - செங்காந்தள்

⇒ தாவரவியல் குடும்பம் -`Gloriosa Superba’

⇒ ஆங்கிலப்பெயர்கள்- Gloriosa Lily, Fire Lily, Flame Lily

## தமிழ்த்துறையினரும் தமிழ்மாலையும்



இரா.நாகராணி





தமிழ்நாட்டின் மாநிலப்பறவை - மரகதப்புறா

### இணைய வழியிலான பன்னாட்டு ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்வு

⇒ பொதுவான யோகா நெறிமுறை விளக்கங்கள் என்னும் தலைப்பில் யோகா அறிவியல் மற்றும் சிகிச்சை பீடம் மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அகாடமி நடத்திய 15 நாள்கள் பயிற்சி - 05.06.2022 முதல் 19.06.2022 வரை.

⇒ தமிழ்ப் பதிப்பு வரலாறும் தமிழ் ஆளுமைகளும் எனும் தலைப்பில் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் நடத்திய ஏழு நாள் பயிற்சி - 20.07.2022 – 26.07.2022

⇒ அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் – அரண் தமிழ் அறக்கட்டளை இணைந்து நடத்திய பன்முக நோக்கில் புதுச்சேரி – ஆவணமாக்கம் 2022 – 07.08.2022 – 15.09.2022 – 40 நாள்கள்

⇒ பல்கலைக்கழக மானியக் குழுவின் மனிதவள மேம்பாட்டு மையத்தின் (UGC-HRDC) -கற்பித்தல் கற்றல் மையம், ராமானுஜன் கல்லூரி,இணைந்து நடத்திய பல்கலைக்கழக ஆசிரியர் தூண்டல் பயிற்சி திட்டத்தில் (FIP) பயிற்சி - 21.08.2022 -19.09.2022.

### UGC Care list Journals -சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

⇒ இராஜம் கிருஷ்ணனின் விருது பெற்ற நாவல்களில் சமுதாயச் சிந்தனைகள் என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை ஜூன் 2022இல் வெளியானது.

### சிறப்பு விருந்தினர்

⇒ மாடம்பாக்கம், சீயோன் மேனிலைப்பள்ளியில் நடைபெற்ற கல்வி வளர்ச்சி நாள் விழாவில் பங்கேற்பு.

⇒ ஸ்ரீராம் இலக்கிய கழகம் நடத்திய பேச்சு மற்றும் ஓவியப் போட்டியில் ஒருங்கிணைப்பாளராக பங்கேற்பு - 15.10.2022.

⇒ அறிவியல் பெயர் - Chalcophaps indica

⇒ ஆங்கிலப் பெயர் - Emerald dove

# தமிழ்த்துறையினரும் தமிழ்மாலையும்



முனைவர் இரா.கீதா

## இணைய வழியிலான பன்னாட்டு ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்வு

⇒ தமிழ்ப் பதிப்பு வரலாறும் தமிழ் ஆளுமைகளும் எனும் தலைப்பில் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் நடத்திய ஏழு நாள் பயிற்சி— 20.07.2022 – 26.07.2022

⇒ பல்கலைக்கழக மானியக் குழுவின் மனிதவள மேம்பாட்டு மையத்தின் (UGC - HRDC) - கற்பித்தல் கற்றல் மையம், ராமானுஜன் கல்லூரி, டெல்லி பல்கலைக்கழகம் - ஆசிரியர் தூண்டல் பயிற்சி திட்டத்தில் (FIP) பயிற்சி - 21.08.2022 - 19.09.2022.

## UGC Care list Journals - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

-

⇒ பன்முகப் பார்வையில் வள்ளலார் என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை ஜூன் 2022 இல் வெளியானது.



த.வாசுகி

## UGC Care list Journals - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்


⇒ சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை – சிறுகதைத் தொகுப்பில் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள் என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை ஜூன் 2022 இல் வெளியானது.



தமிழ் மாநில மரம் - பனை மரம்

⇒ தாவரவியல் குடும்பம் - ‘Borassus ’

⇒ ஆங்கிலப் பெயர் - Palm Tree



தமிழ் மாநில பூச்சி இனம் - மலைச்சிறகன்

⇒ பெயர் - மலைச்சிறகன் எனும் தமிழ் மறவன் பட்டாம்பூச்சி

⇒ அறிவியல் பெயர் சிரோகோரா தாயிசு

⇒ ஆங்கிலப் பெயர் தமிழ் யோமேன் (Tamil Yeoman).

⇒ அரசுச் சின்னங்களில் ஒன்றாக தமிழ்நாடு அரசால் சூலை, 2019 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டது.

## தமிழ்த்துறையினரும் தமிழ்மாலையும்



முனைவர்
மு.பரமேஸ்வரி

### இணைய வழியிலான பன்னாட்டு ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்வு

⇒ தமிழ்ப் பதிப்பு வரலாறும் தமிழ் ஆளுமைகளும் எனும் தலைப்பில் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் நடத்திய ஏழு நாள் பயிற்சி - 20.07.2022 – 26.07.2022.

⇒ பல்கலைக்கழக மானியக் குழுவின் மனிதவள மேம்பாட்டு மையத்தின் (UGC-HRDC) ஆசிரியர் தூண்டல் பயிற்சி திட்டத்தில் ( FIP) பயிற்சி - சென்னைப் பல்கலைக் கழகம் -22.06.2022 - 21.07.2022.

### UGC Care list Journals - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

⇒ கள்ளிக்காட்டு இதிகாசம் காட்டும் சமூகப் பிரச்சினைகள் மற்றும் சடங்குகள் என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை ஜூன் 2022 இல் வெளியானது.



தமிழ் மாநில பழம் - பலாப்பழம்
அறிவியல் பெயர் - *Atrocarpus heterophyllus*



### தமிழ் மாநில விலங்கு - நீலகிரி வரையாடு

கடல் மட்டத்திலிருந்து 1 200,முதல் 2 600,மீட்டர் உயரம் உள்ள மலையில் புற்கள் அடர்ந்த சோலைப் பகுதியில் வரையாடுகள் அதிகம் வசிக்கும். பாறைகளில் முளைத்துள்ள புற்களையும் ,தாவர இலைகளையும் இவை உணவாகக் கொண்டுள்ளன. முதிர்ந்த ஆண் வரையாடு சராசரியாக 100 கிலோ எடையும் 110 செ.மீ. உயரமும் இருக்கும். பெண் வரையாடு சராசரியாக 50 கிலோ எடையும் 80 செ.மீ. உயரமும் இருக்கும். பெண் வரையாட்டின் கொம்பு ஆண் வரையாட்டின் கொம்பைவிடக் குட்டையாகவும் பின்னோக்கிச் சரிவாகவும் அமைந்திருக்கும்.



### தமிழ் மாநில விளையாட்டு - கபடி

"கபாடி" (kabadi) என்ற வார்த்தை "கை-பிடி" என்ற தமிழ் வார்த்தையிலிருந்து உருவானது. இது சடு-குடு என்றும் அழைக்கப்படுகிறது .கபடி விளையாடுவதை ஒரு பொழுதுபோக்கு விளையாட்டாகப் பௌத்த இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஜல்லிக்கட்டுக்கு முன்பு கபடி ஒரு கேலிக்கூத்தாக விளையாடப்பட்டது, பின்னர் அது வணிக விளையாட்டாகப் பரவியது. இது மாலத்தீவில் 'பாவதிக் ,'பஞ்சாபில்' கவுடி 'மற்றும் வங்காளத்தில்' ஹடுடு 'என்ற பெயர்களால் அறியப்படுகிறது.

## மாணவிகளின் தேன்துளிகள்



### தலையாட்டி பொம்மை

அகத்தின் அழகை முகத்தில் காட்டி ,
ஆனந்தத்தின் ஆழத்தை நினைவில் வூட்டி !
இயங்குகின்ற உலகை இனிதாக மாற்றி,
ஈகையின் சிறப்பை எளிதில் காட்டி.,
உள்ளத்தின் உணர்வை உறுக்கிக் கட்டி,
ஊரின் சிறப்பை தனித்துக் காட்டி !
என் தலையை உன்போல் ஆட்டி ;
ஏட்டில் எழுதா சரித்திரம் புரட்டி !
ஐம்புலன்களையும் அழகில் கட்டி ,
ஒட்டுமொத்த அழகையும் உன்னிடம் கொட்டி !
ஓவிய வண்ணத்தை உன்மேல் தீட்டி
ஔசீரம் பதவியை உனக்கே நீட்டி ,
ஃ ஆயுதத்தை உன் நெத்திப் பொட்டில் ஒட்டி,
அழகுப் பார்த்தேன் என் தலையாட்டி பொம்மைக்கு !



சி.தர்ஷிணி
முதலாம் ஆண்டு,
வணிகவியல் "அ"பிரிவு

## மாணவிகளின் தேன்துளிகள்





### தேர்த்தொம்பை

தொம்பைத் தோரணங்கள் சூழப் பெருந்தேர் அசைந்தாடி வருவதை நாம் கண்டிருப்போம். பிரம்மாண்டமாக ஊர் கூடிக் கொண்டாடி, தேரின் கரமெனும் வடம் பிடித்திழுக்க, தேர் அசைந்து நகரும். தேரில் மரச் சிற்பங்கள் செய்து அடுக்கிவைத்து அழகு பார்த்தாலும், அதன் அழகை உயர்த்திக் காட்டுவது அதில் கட்டப்பட்டிருக்கிற தொம்பைகள் தான். பல வண்ண நிறங்களில் நீண்ட குழல் போலிருக்கிற அது தேர் நகர நகரக் காற்றின் தொடுதலால் அசையும். உருளும். சுழலும். அதுதான் தேர்த் தொம்பை.

மதுரை மாநகரின் தெற்கு வீதியில் சுந்தரவடிவேல் என்பவர் பரம்பரையாகத் தேர்த்தொம்பைகள் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளார். அசைந்து வருவதால் அசைந்தாடி மாலை எனவும் தொங்கிக் கொண்டிருப்பதால் தொம்பை என்றும் பெயரிடப் பட்டுள்ளது. 300 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியம் மிக்க இக்ககலையைப் பரம்பரை பரம்பரையாகப் பல குடும்பங்கள் செய்து வந்த நிலை மாறி, தற்போது இவர் மட்டுமே இதைச் செய்து வருகிறார். கேரளாவில் தேர்ச்சீலைகளை யானைக்கால் என்கின்றனர். பார்த்த உடனே கவனத்தை இழுத்துப் பிடிக்க வேண்டுமென்பதற்காகச் செய்யப்படுபவை தேர்த் தொம்பைகள். தொம்பைகளுக்கு மேல் தேருக்கான மேற்போர்வையாக இருப்பவை தேர்ச்சீலைகள். தேரின் முகப்பிற்கும், பக்கப் பகுதிகளுக்கும், தொம்பைகளுக்கும் ஒத்திசைவாகத் தேர்ச்சீலைகள் தயாரிக்கப்பட வேண்டும். கைவினைக் கலைகளாகவே தொடர்ந்து வருகின்ற இவ்விரண்டும் மரபார்ந்த தொடர்ச்சியைப் பெற்றுள்ளன.

ம.ராதிகா
முதலாமாண்டு ,
கணினி யியல் "ஆ" பிரிவு

## மாணவிகளின் தேன்துளிகள்







### பாதுகாக்கப்பட வேண்டிய பவானி ஜமுக்காளம்

ஜமுக்காள நகரமாம்
ஈரோடு மாவட்டம் பவானியில் உருவாகி,
இயந்திரத்தின் உதவியின்றி, கைகளால்....
பருத்தி நூல் மற்றும் கம்பளி நூல்களைக் கொண்டு தயாராகி,
நவீன உலகில் வடிவமைப்புகள் மாறினாலும்
அடிப்படை மரபுகள் மாறாத பாங்குடன் மிளிர்கின்றது!
பல வண்ணங்களைக் கொண்ட
தடிமனான பவானி ஜமுக்காளம்
நூல் நெய்தலின் தனிச்சிறப்புடன்
ஆண்டுகள் பல கழிந்தாலும்
கண்ணைக் கவரும் கலைநயம் மிக்கது!
அன்று முதல் இன்று வரை...
திருமணம், வளைகாப்பு, காதுகுத்து...
விழாக்களின் நாயகனாய்...
மரபின் சின்னமாய் வலம் வருகின்றது!
மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த
கைத்தறி ஜமுக்காளம்...
காலப்போக்கில்,
குறைவான விலையில் கார்பெட் ஜமுக்காளங்கள்
தமிழகத்தில் நுழைந்ததால்,
ஆட்கள் பற்றாக்குறையினால்
புதிய தலைமுறையின் ஆர்வமின்மையால்
பவானி ஜமுக்காளம் கேள்விக் குறியானது!
ஆயினும்
பழைய தலைமுறையினரால்...
பாரம்பரிய ஜமுக்காளங்களைப் பார்க்க முடிகின்றது!
கலைந்த ஜமுக்காளத்தில் படுத்து உறங்கிய இடம்...
இன்று கனவாக வந்து போகிறது...
இந்திய அரசால் புவிசார் குறியீடாக அங்கீகரிக்கப்பட்ட
பவானி ஜமுக்காளம்
பாதுகாக்க பட வேண்டிய
தமிழ்நாட்டின் ஒரு அடையாளம்!

சுப்ரஜா.ச
மூன்றாம் ஆண்டு, கூட்டாண்மைச் செயலரியல்

## மாணவிகளின் தேன்துளிகள்









### மண் பொம்மை செய்தல்

தமிழர்கள் கைவினைக் கலைகளில் சிறந்து விளங்குபவர்கள். இக்கலைகள், தொழில் சார்ந்த கலைகள் ஆகும். அவற்றுள்ளும் மிகவும் அழகான கலை, மண் பொம்மைகள் தயாரிப்பதாகும். கிராமங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாடப் பிழைப்புக்காகக் களி மண்ணைக் கொண்டு பொம்மைகள் செய்து விற்பனை செய்வதுண்டு. வண்ணங்கள் அடித்து அழகு சேர்க்கப்பட்ட இப்பொம்மைகள் வீடுகளில் அலங்காரப் பொருட்களாகப் பயன்படுகின்றன.

தெய்வங்களை மண் சிலைகளாக வடித்து வழிபடும் பாரம்பரியமும் நம்மிடம் உண்டு. பண்டைய காலங்களில் உருவாக்கப்பட்ட மண் சிலைகள் பலவும் அகழ்வாராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளன. இன்றைய காலகட்டதிலும் விநாயகர் சதுர்த்தி அன்று மண்ணால் ஆன விநாயகர் சிலைகள் விற்பனை செய்யபட்டு வருகின்றன. அவற்றை வீட்டிற்கு வாங்கிச் சென்று வழிபடும் பாரம்பரியம் இன்றும் தொடர்கிறது.

### செய் முறை:

மண் பொம்மைகள் செய்வதற்குக் களி மண் முக்கிய பொருளாகும். ஆற்றங்கரைகளிலிருந்து எடுத்து வரப்பட்ட களி மண் நன்றாகக் காயவைக்கப்பட்ட பின் கல், தூசி, போன்றவற்றை நீக்கி, நீரூற்றிப் புளிக்க வைக்கப்படும், பின்பு ஆற்று மணல் மற்றும் வைக்கோல் சேர்த்து மிதிக்கப்பட்டு குழைத்து, பொம்மைகள் வடிவமைக்கப்படுகின்றன. பின்னர் அவை உலர வைக்கப்பட்டு வண்ணங்கள் பூசி அலங்காரம் செய்யப்படுகிறன.

கௌசல்யா கா
இரண்டாம் ஆண்டு
கணினியியல்

## மாணவிகளின் தேன்துளிகள்









### நெட்டி மரவேலைப்பாடுகள்

தஞ்சாவூருக்குப் புகழ் தருகிற நுண்கலைகளுள் ஒன்றாகிய நெட்டி மர வேலைப்பாடுகளுக்குப் புவிசார் குறியீட்டு அங்கீகாரத்தை 2020 இல் மத்திய அரசு வழங்கியுள்ளது. இக்கலை மிகவும் பழமையானது. சரபோஜி மன்னர் காலத்தில் இக்கலைக்கு மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் கிடை என்ற பெயரில் நெட்டி குறிப்பிடப்படுகிறது. நெட்டி, குளம் ஏரிகளில் விளையும் ஒருவகைத் தாவரம். மரம் என்று சொன்னாலும் இது செடி வகையைச் சேர்ந்ததாகும். மஞ்சள் நிறப்பூவும், நெல்லி இலை மாதிரியான இலையும் தாமரைத்தண்டு போலப் பச்சை நிறத்தில் தண்டையும் கொண்டிருக்கும். தண்டில் கணுவுக்குக் கணு ரோமம் போன்ற வேர்களும் தண்டின் நடுவில் சிறியதாக துவாரமும் இருக்கும். நான்கிலிருந்து ஐந்தடி உயரத்துக்கு வளரும் இச்செடியின் தண்டை ஜனவரி மாதத்தில் தான் அறுவடை செய்ய முடியும். குளத்தில் முழங்கால் அளவுக்குத் தண்ணி இருக்கும் போது உள்ளே இறங்கி, வேர்ப்பகுதியில் கொஞ்சம் இடம் விட்டுட்டு வெட்டி வர வேண்டும். தண்டு கால் அங்குலத்திலிருந்து நான்கு அங்குலம் வரை தடிமனாக உருண்டை வடிவத்தில் இருக்கும். வெட்டும்போது பச்சை நிறத்தில் இருக்கிற தண்டு காய வைத்ததும் பழுப்பு நிறத்துக்கு மாறிவிடும். தண்டுக்குள் இருக்கும் சக்கை வெள்ளை நிறத்தில் இருக்கும். அந்தச் சக்கையில தான் நெட்டிச்சிற்பங்கள் செய்யப்படுகின்றன. இம்மரம் டெல்டா பகுதிகளில் டிசம்பர் முதல் பெப்ரவரி மாதம் வரை அதிகம் விளைகிறது. காய்ந்த நெட்டி எடையற்றதாக, மிகவும் இலேசானதாக இருக்கும். நெட்டிக்குச் சடை, பித்து, பெண்டு, கிடை, கிடச்சி என்றும் பெயர்களுண்டு.

மாட்டுப் பொங்கலன்று மாடுகளுக்கு நெட்டியால் செய்யப்பட்ட சாயம் தோய்க்கப்பெற்ற பலவண்ண மாலைகளை மாடுகளுக்கு அணிவிக்கும் மரபு தஞ்சைப் பகுதிகளில் உள்ளது. கோயில்கள், உருவங்கள், வாழ்த்து மடல்கள், இயற்கைக் காட்சிகள், கட்டிடங்கள், மாதிரி வடிவங்கள், மாலைகள் செய்வதற்கு நெட்டியைப் பயன்படுத்துகின்றனர். இயந்திரங்களின்றி செய்யப்படுகிற கைவினைக் கலையாக நெட்டி மர வேலைப்பாடு திகழ்கிறது. இதில் ஒரு அடி முதல் பன்னிரண்டு அடி வரை சிற்பங்கள் செய்யலாம். இந்த சிற்பங்களுக்கு ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜப்பான், சிங்கப்பூர் போன்ற அயல் நாடுகளில் வரவேற்பு உள்ளது.

காயத்திரி ராம்குமார்
இரண்டாமாண்டு, கூட்டாண்மைச் செயலரியல்

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும

உள்ளழிக்க லாகா அரண்.











# ஷசுன் மாணவிகளின் திறன்

| வ.எண் | நாள் | பெயர் | போட்டி | கல்லூரி/ நிறுவனம் | பரிசு | துறை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 02.10.2022 | தா.தெரேஸா ஷோபிதா | ஓவியப்போட்டி | ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி & ரோட்டரி கிளப் ஆஃப் சென்னை பிரஸ்டீஜ் | இரண்டாம் பரிசு | இரண்டாம் ஆண்டு கணினியியல் |
| 2 | 05.11.2022 | கிருத்திகா சு.கா. | பேச்சுப்போட்டி | தமிழ் வளர்ச்சித் துறை | முதல் பரிசு | முதலாம் ஆண்டு கணினியியல் "அ"பிரிவு |
| 3 | 05.11.2022 | மா.ரா.வசுநிதா | பேச்சுப்போட்டி | தமிழ் வளர்ச்சித் துறை | மூன்றாம் பரிசு | |
| 4 | 05.11.2022 | த.சௌந்தர்யா | கட்டுரைப்போட்டி | தமிழ் வளர்ச்சித் துறை | முதல் பரிசு | முதலாம் ஆண்டு, வணிகவியல் சிறப்பு |
| 5 | 05.11.2022 | ம.பிரியா | கட்டுரைப்போட்டி | தமிழ் வளர்ச்சித் துறை | இரண்டாம் பரிசு | முதலாம் ஆண்டு கணினியியல் "ஆ"பிரிவு |

